## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 1 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக ஒழுங்குவிதியின் 20 ஆம் உறுப்புரை மற்றும் பல்லைக்கழகச் சட்டத்தின் 108(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் தேய்மானம் மற்றும் பயன்படு ஆயுட்காலம் குறைந்தப்பட்சம் அனைத்து ஆண்டுகளிலும் அறிக்கையிடும் காலப்பகுதி நிறைவடையும் நாளிலே மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட வேறுபாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் -3 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டின் வேறுபாடாக கணக்கிடப்பட வேண்டும். அவ்வாறாயினும், முழுமையான தேய்மானம் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 306,946,647 ஆன ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் அவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தில் காணப்படுகின்ற தொழிநுட்ப சொத்துக்கள் தொடர்பில் பயன்படு ஆயுட்காலம் மதிப்பிடப்படுவதற்கு நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு காணப்படுகின்ற அறிவு போதுமானது அல்லாமையினால் விலைமதிப்பு திணைக்களத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் இதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 18 ஆம் பந்திக்கு முரணாக குறிப்பாக மதிப்பிடக்கூடிய திரள் செலவீனம் ரூபா 1,109,188 அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய கூட்டுத்தொகை ரூபா 545,000 ஆன திரள் செலவினம் கணக்கிடப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டில் மிகை ரூபா 564,188 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | போக்குவரத்து செலவினம், பரீட்சை கட்டணம், விரிவுரை கட்டணம் இற்காக தொடர்புடைய செலுத்தப்பட வேண்டிய செலவினம் பரீட்சை மற்றும் கல்வி பகுதிகளில் ஆண்டு இறுதியில் மதிப்பீடாக பெறப்பட்டு இலாபத்திலிருந்து ஒதுக்கி காண்பிக்கப்பட்டுள்ளது. அத் திணைக்களங்களுடன் கலந்துரையாடி 2021 ஆம் ஆண்டிற்காக குறிப்பாக காணப்படுகின்ற பொறுப்பு அளவினை பெற்றுக் கொண்டு சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 4,100,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய ரூபா 820,000 ஆன தேய்மானம் கணக்கிடப்படாமையினால் ஆண்டின் மிகை மற்றும் ஆண்டு இறுதி திகதிக்கு சொத்துக்களின் நிகர பெறுமதி அப் பெறுமதியினால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | இப் பிழை தற்போது நாளேட்டு வவுசர் இல 00001C ஊடாக திருத்தப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பெறுமதிகள் முன்வைக்கப்படும் | சரியாக கணக்கிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 98,336,164 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 192,687,731 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 94,351,567 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரச அளிப்புக்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் குறைந்தமை பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 திசெம்பர் 31 இற்கு நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த நிறுத்தி வைக்கப்பட்ட பணமும் உள்ளடக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 30,656,944 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதி 01 ஆண்டு தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருப்பினும் அம் மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைக்கப்பட்ட பணம் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக தொடர்புடைய பகுதிகளுக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, முன்னைய ஆண்டுகளுக்கு தொடர்புடைய நிறுத்தி வைக்கப்பட்ட பணம் நடைமுறையல்லா பொறுப்பாக திருத்தப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | தொடர்புடைய தரப்பினர்களுக்கு தீர்க்கப்படுவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 3,605,803 ஆன PGIM Research & Publication நிதியத்தில் காணப்படுகின்ற பண மீதி நிதியத்தின் நோக்கங்களுக்காக திட்டமொன்றுடன் பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந் நிதியத்தில் குறிக்கோளுடைய பணிகள் ஏதும் கடந்த இரு ஆண்டுகளில் செயற்பாடாமையினால் அந் நிதி பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | குறிக்கோளுடைய பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு திட்டத்துடன் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் மறுவாழ்வு மற்றும் நூலக புத்தக மற்றும் அறிக்கைக வெளியீடுகளுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,625,666 தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த எஞ்சியுள்ள நிதி 2021 ஆம் ஆண்டில் தொடர்படைய செலவினங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிக்கோளுடைய பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு திட்டத்துடன் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |